www.Padasalai.Net

# தமிழ்

பன்னிரெண்டாம் வகுப்பு

## பள்ளிக் கல்வித் துறை

## கிருஷ்ணகிரி மாவட்டம்

## பொதுத் தேர்வு சிறப்புக் கையேடு

## 2012-2013

வெளியீடு

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

**RMSA.** கிருஷ்ணகிரி

# பன்னிரெண்டாம் வகுப்பு

# தமிழ் முதல் தாள்

# (செய்யுள், இலக்கணம்)

**ஓர் மதிப்பெண் வினாக்கள்**

**தேர்ந்தெடுத்து எழுதுக.**

| | |
|---|---|
| 1. கம்பராமாயணத்திற்கு கம்பர் இட்ட பெயர் | - இராமவதாரம் |
| 2. தமிழரசிக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவர் | - சுவாமிமலை முருகன் |
| 3. நாமக்கல் கவிஞருக்கு நடுவணரசு வழங்கிய விருது | - பத்மபூஷன் |
| 4. புறநானூற்றுப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் | - ஜி.யு.போப். |
| 5. துமிழரின் வாழ்வியல் சிந்தனைகளுக்கு கருவூலமாக விளங்குவது | - புறநானூறு |
| 6. புறநானூற்றில் இடம்பெற்றுள்ள திணைகள் | - 11 |
| 7. புறநானூற்றில் இடம்பெற்றுள்ள துறைகள் | - 65 |
| 8. அகநானூற்றின் அடி வரையறை | - 13 - 31 |
| 9. நெடுந்தொகை என அழைக்கப்படுவது | - அகநானூறு |
| 10. அகநானூற்றைத் தொகுத்தவர் | - பாண்டியன் உக்கிர பெருவழுதி |
| 11. நற்றிணைப் பாடல்களின் அடிவரையறை | - 9 - 12 |
| 12. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை | - 38 |
| 13. திருக்குறளில் அமைந்துள்ள இயல்களின் எண்ணிக்கை | - 9 |
| 14. திருக்குறளுக்கு உரை எழுதிய பதின்மருள் ஒருவர் | - பரிமேலழகர் |
| 15. ஐங்குநூறு நூலைத் தொகுத்தவர் | - புலத்துறை முற்றிய கூடலூர்க்கிழார் |
| 16. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு | - காதை |
| 17. 'தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேறும் சிலப்பதிகாரம்' என்று பாராட்டியவர் | - கவிமணி தேசிக விநாயகம் |
| 18. வரி என்பது | - இசைப்பாடல் |
| 19. கம்பராமாயணத்தின் காண்டங்கள் | - ஆறு |
| 20. சிறிய திருவடி என்று அழைக்கப்படுபவர் | - அனுமன் |
| 21. தனையை என்ற சொல்லின் பொருள் | - மகள் |
| 22. மருகி என்ற சொல்லின் பொருள் | - மருமகள் |
| 23. தேம்பாவணியை இயற்றியவர் | - வீரமாமுனிவர் |
| 24. தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர் | - சூசை முனிவர் |
| 25. 'கான்ஸ்டான்' என்பதன் பொருள் | - அஞ்சாதவன் |
| 26. 'சதுரகராதி' தொகுத்தவர் | - வீரமாமுனிவர் |
| 27. கிறிஸ்துவச் சமயத்தாரின் கலைக் களஞ்சியம் | - தேம்பாவணி |
| 28. சாகித்ய அகாதமி பரிசு பெற்ற பாரதிதாசனின் நூல் | - பிசிராந்தையார் நாடகம் |

www.Padasalai.Net

29. பாரதிதாசனார் வெளியிட்ட இதழ் - குயில்
30. ' பிரபந்தம்' என்னும் வடச்சொல்லின் பொருள் - நன்கு கட்டப்பட்டது.
31. (பிரபந்தம்) சிற்றிலக்கிய வகை எத்தனை - 96
32. இராசராச சோழனுலாவைப் பாடியவர் - ஒட்டக்கூத்தர்
33. திருவேங்கடத்தந்தாதியைப் பாடியவர் - பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
34. கலம்பகத்தில் உள்ள உறுப்புகள் - 18
35. மதுரைக் கலம்பகத்தை இயற்றியவர் - குமரகுருபரர்
36. மினாட்சியம்மைப் பிள்ளைத் தமிழை இயற்றியவர் - குமரகுருபரர்
37. ' புலன்' என்னும் இலக்கிய வகை - பள்ளு
38. 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச்செய்வீர்' என்று கூறியவர் - பாரதியார்
39. இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் - பாரதியார்
40. தமிழகத்தின் வோர்ட்ஸ்வொர்த் என்று அழைக்கப்பட்டவர் - வாணிதாசன்
41. உவமைக் கவிஞர் என அழைக்கப்பட்டவர் - சுரதா
42. தமிழக அரசின் பாவேந்தர் பரிசைப் பெற்றவர் - சுரதா
43. 'மரபுக்கவிதையின் வேர் பார்த்தவர், புதுக்கவிதையின் மலர் பார்த்தவர்' எனப் பாராட்டப்பட்டவர் - கவிக்கோ அப்துல்ரகுமான்
44. 'பால்வீதி' நாடகத்தை எழுதியவர் - கவிக்கோ அப்துல்ரகுமான்
45. 7 ஆம் திருமுறையை பாடியவர் - சுந்தரர்
46. நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்திற்கு உரை எழுதியவர் - பெரிய வச்சான் பிள்ளை
47. மணிமேகலை வேறு பெயர் - மணிமேகலைத் துறவு
48. இரட்சணியம் என்பதன் பொருள் - ஆன்ம ஈடேற்றம்
49. இரட்சணிய யாத்திரிகம் எழுதியவர் - எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை
50. கிறித்துவக் கம்பர் எனப் போற்றப்படுபவர் - எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை
51. சீறாப்புராணத்தை இயற்றியவர் - உமறுப்புலவர்
52. உமறுப்புலவரை ஆதரித்தவர் - சீதக்காதி
53. 'உழவர் பாட்டு' என்று கூறப்படுவது - பள்ளு
54. சின்ன சீறா எழுதியவர் - பனு அகமது மரைக்காயர்
55. 'எழிலோவியம்' என்ற நூலை இயற்றியவர் - வாணிதாசன்
56. ஒன்றேயென்னின் என்னும் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ள காண்டம் - யுத்த காண்டம்
57. திருக்குறள் என்பது - அடையடுத்த கருவியாகுபெயர்
58. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் - சிலப்பதிகாரம்
59. 'உலா' என்பதன் பொருள் யாது? - பவனிவரல்
60. சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை கூறும் நூல் - பாட்டியல் நூல்கள்

| பொருத்துக. | | விடைகள் |
|---|---|---|
| 1. குறிஞ்சி | - அ. ஓரம்போகியார் | 1 - ஈ |
| 2. முல்லை | - ஆ. அம்மூவனார் | 2 - உ |
| 3. மருதம் | - இ. ஓதலாந்தையார் | 3 - அ |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| 4. நெய்தல் | - ஈ. கபிலர் | 4 ___ ஆ |
| | - உ. பேயனார் | |

| | | |
|---|---|---|
| 1. மணிமேகலை | - அ. எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை | 1 - இ |
| 2. தேவாரம் | - ஆ. உமறுப்புலவர் | 2 - ஈ |
| 3. சீறாப்புராணம் | - இ. சீத்தலைச் சாத்தனார் | 3 - ஆ |
| 4. இரட்சணிய யாத்திரிகம் | - ஈ. சுந்தரர் | 4 - அ |
| | - உ. குணங்குடி மஸ்தான் | |

| | | |
|---|---|---|
| 1. இராசராச சோழனுலா | - அ. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் | 1 - ஈ |
| 2. திருவேங்கடத்தந்தாதி | - ஆ. குமரகுருபரர் | 2 - அ |
| 3. மதுரைக் கலம்பகம் | - இ. ஆசிரியர் பெயர் தெரியவில்லை | 3 - ஆ |
| 4. முக்கூடற்பள்ளு | - ஈ. ஒட்டக்கூத்தர் | 4 - இ |
| | - உ. காரைக்குாலம்மையார் | |
| 1. இளங்கோவடிகள் | - அ. மணிமேகலை | 1 - ஆ |
| 2. திருத்தக்கதேவர் | - ஆ. சிலப்பதிகாரம் | 2 - இ |
| 3. நாதகுத்னார் | - இ. சீவக சிந்தாமணி | 3 - உ |
| 4. சீத்தலைச் சாத்தனார் | - ஈ. வுளையாபதி | 4 - அ |
| | உ. குண்டலகேசி | |

**நூல் நூலாசிரியர், யார் யாரிடம் போன்றன. . .**

I. " நல்லது செய்த லாற்றீராயினும்
அல்லது செய்த லோம்புமின்"

1. இவ்வரிகள் இடம்பெற்ற நூல்? - புறநானூறு
2. பாடலின் ஆசிரியர் ? - நரிவெரூஉத்தலையார்
3. யார் யாரிடம் கூறியது ? - நரிவெரூஉத்தலையார் சான்றோர்களிடம்
4. இவ்வடிகளின் பொருள் யாது? - நன்மை செய்யவில்லை என்றாலும் தீமை செய்யாமல் இருங்கள்.

II. "ஐயரி உண்கன் அழுதுஏங்கி அரற்றுவாள்
தெய்வம் உற்றாள் போலும் தகையள், இதுவென்கொல்?"

1. இவ்வரிகள் இடம்பெற்ற நூல் ? - சிலப்பதிகாரம்
2. யார், யாரிடம் கூறியது - ஊர்மக்கள் தங்களுக்குள்
3. அழுது ஏங்கி அரற்றுவாள் யார்? - கண்ணகி
4. இவ்வரிகளின் பொருள் - அழகிய மையுண்ட கண்களுடன் அழுது புலம்பும் இப்பெண் தெய்வம் வந்துற்றவளாகக் காணப்படுகிறாள் என்பதாகும்.

www.Padasalai.Net

III. “பெரிய குன்றமோ? பேயதோ? பூதமோ?
ஏதோ உரிய தொன்றிலா உருவினைக் கண்டுளி வெருவி”

1. இடம் பெற்ற நூல் ? - தேம்பாவணி
2. நூலின் ஆசிரியர் ? - வீரமாமுனிவர்
3. இவ்வரிகளில் வரும் உருவத்தை உடையவர் - கோலியாத்து
4. இவ்வுருவத்தை கண்டு வெருவியார்கள் - இஸ்ராயேல் நகர மக்கள்

IV. “புல்லார் புரவி வல்விரைந்து பூட்டி நெடுந்தேர் ஊர்மதி வலவ”

1. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் ? - அகநானூறு
2. இந்நூலின் ஆசிரியர் யார் ? - மதுரை மள்ளனார்
3. யார் யாரிடம் கூறியது ? - தலைவன் தேர்ப்பாகனிடம்
4. புரவி என்ற சொல்லால் குறிப்பிடப்படுவது - குதிரை

கோடிட்ட இடங்களை நிரப்புதல்

1. எழுமை __________ உள்ளுவர் தங்கண்
__________ துடைத்தவர் நட்பு (எழுபிறப்பும், விழுமந்)
2. காலத்தினாற் செய்த __________ சிறதெனினும்
__________ மாணப் பெரிது. ( நன்றி, ஞாலத்தின்)
3. அஞ்சுவ தஞ்சாமை __________ அஞ்சுவ
தஞ்சல் அறிவார் __________ (பேதைமை, தொழில்)
4. எவ்வ துறைவ __________ உலகத்தோடு
அவ்வ துறைவ __________ ( உலகம், அறிவு)
5. சொல்லுதல் யார்க்கும் __________ அரியவாம்
__________ வண்ணம் செயல் ( எளிய, சொல்லிய)
6. கொன்றன்ன __________செயினும் அவர்செய்த
ஒன்று நன் __________ கெடும் ( இன்னா, உள்ள)

மனப்பாடச் செய்யுள்

1. பல்சான் றீரே . . . . புறநானூறு
2. விற்பெருந்தடந்தோள் . . . . . கம்பராமாயணம்
3. உரைநடையின் சிக்கனம்தான் . . . சிக்கனம்
4. திருக்குறள் . . . . மனப்பாடக்குறள்

இருபது வரிகளில் விடை படித்து ( 2, 4, 8 மதிப்பெண் வினாக்களுக்கு விடை எழுதுதல்)

1. பொறையுடைமை என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துகள்.
2. வினைத்திட்பம் என்னும் தலைப்பில் திருவள்ளுவர் கூறியுள்ளன.
3. சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகள்
4. கோலியாத்து என்ற அரக்கனின் வருகையும் தாவீதன் அதனை வென்ற திறத்தினையும் எழுதுதல்
5. தீக்குச்சிகள் மூலம் கவிக்கோ அப்துல் ரகுமான் கூறியவை யாவை?

www.Padasalai.Net

# இலக்கணம்

**அணிகள்**

1. சொற்பொருட் பின்வரு நிலையணி
2. உவமையணி

**திணை**

1. பொதுவியல் திணை
2. குறிஞ்சித் திணை

**துறை**

1. பொருண்மொழிக் காஞ்சி

**பகுபதம்**

1. பெயரெச்ச விகுதி
2. வினையெச்ச விகுதி
3. தொழில் பெயர் விகுதி
4. வியங்கோள் வினைமுற்று விகுதி
5. ஏவல் பன்மை விகுதி

**இலக்கணக் குறிப்பு**

1. பண்புத்தொகை
2. வினைத்தொகை
3. வியங்கோள் வினைமுற்று
4. தொழிற்பெயர்
5. ஏவல் பன்மை
6. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்
7. அடுத்துத் தொடர்

**புணர்ச்சி விதி**

1. உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே
2. உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
3. பூப் பெயர் முன் இன மென்மையும் தோன்றும்

இலக்கணம் சார்ந்த வினாக்களுக்கு ஐ.வி.டி.பி. புத்தகம் பார்த்து நன்கு பயிற்சி செய்யவும்.

www.Padasalai.Net

# பன்னிரெண்டாம் வகுப்பு

# தமிழ் இரண்டாம் தாள்

(உரைநடைப்பகுதி)

1. கவிதை
2. வாழ்க்கை
3. நீதி நூல்களில் இலக்கிய நயம்
4. மனிதர் வாழ்க

இந்த நான்கு பாடங்கள் நன்றாக படிக்கவும்

**துணைப்பாடப்பகுதி**

1. பால்வண்ணம் பிள்ளை
2. மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து
3. சட்டை
4. வேலி

இந்நான்கிற்கும் கதை, கருப்பொருள்
இந்நான்கிற்கும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதி பார்க்க வேண்டும்.

கதை கரு எழுதும்போது குறைந்தது மூன்று பக்கங்கள் எழுத வேண்டும். முதலில் முன்னுரையில் தொடங்கி முடிவுரை என முடிக்க வேண்டும். முன்னுரை, முடிவுரை - க்கு இரண்டு பத்திகள் போக இடையில் 9 பத்திகள் ( பத்திகளுக்கு தலைப்பு அடிகோடு இருத்தல் வேண்டும்)

நிகழ்ச்சியை நாடகமாக எழுதும் போது கதை தான் கூறாமல் கதையில் வரும் மாந்தர்கள் பேசிக் கொள்வது போன்று (உரையாடுதல்) இடம், நேரம் இடம்பெரும் கதைமாந்தர்கள் பெயர்கள் குறிப்பிட வேண்டும்

**இலக்கிய நயம் பாராட்டல்**

1. கொடுக்கப்பட்ட பாடலை நான்கு முறைப் படித்து பொருள் தெரிந்துகொள்ளல் வேண்டும்.
2. குறைந்தது மூன்று பக்கங்கள் எழுத வேண்டும்
3. ஆசிரியர் குறிப்பு எழுத பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், தேசிய விநாயகம் பிள்ளை ஆகியோரது குறிப்புகள் தெரிந்துகொள்ளல் வேண்டும்.
4. கீழ்கண்டவாறு தலைப்பிட்டு எழுத வேண்டும்.
    1. முன்னுரை
    2. ஆசிரியர் குறிப்பு
    3. மையக்கருத்து
    4. திரண்ட கருத்து
    5. சொல் நயம்
    6. பொருள் நயம்

7. தொடை நயம்
   எதுகை
   மோனை
   இயைபு
   முரண்
8. கற்பனை
9. அணி நயம்
10. சந்த நயம்
11. பாவகை
12. உருவகம்
13. தலைப்பு
14. முடிவுரை

புழமொழி ஒன்றினை வாழ்க்கை நிகழ்வில் எழுதுதல்

கொடுக்கப்பட்ட மூன்றில் ஒன்று தேர்வு செய்து குறைந்தது ஒரு பக்கம் எழுத வேண்டும். முன்னுரை, முடிவுரை, இடையில் இரண்டு பத்திகளுக்கு அடிகோடிட்ட தலைப்பிடுதல் வேண்டும்.

தமிழாக்கம் செய்தல்

1. A crying child will get milk
   அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்
2. A penny saved is a penny gained
   சிறுதுளிப் பெரு வெள்ளம்
3. All that glitters is not gold
   மின்னுவதெல்லாம் பொன்னல்ல
4. Art is long and life is short
   கல்வி கரையில; கற்பவர் நாள் சில
5. Blood is thicker than water
   தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்
6. Do not add fuel to the flame
   எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றாதே
7. East or west home is best
   எலி வளையானாலும் தனி வளை வேண்டும்
8. Empty vessel makes much noise
   குறை குடம் கூத்தாடும்
9. Haste makes waste
   புதறிய காரியம் சிதறும்

10. Knowledge is power

    புத்திமானே பலமான் ஆவான்

11. Look before you leap

    ஆழம் தெரியாமல் காலை விடாதே

12. Make hay while the sunshine

    காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்

13. Money makes many things

    பணம் பத்தும்  செய்யும்

14. No smoke without fire

    நெருப்பு இல்லாமல் புகையாது

15. Prevention is better than cure

    வருமுன் காப்போம்

16. Think everybody a like

    தன்னைப் போலப் பிறரை நினை

17. Tit for tat

    பழிக்குப் பழி

18. Too much of anything is good for nothing

    அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

19. Union is strength

    ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

20. Where there is a will there is a way

    மணம் இருந்தால் மார்க்கம் உண்டு

கொடுக்கப்பட்ட ஒவ்வொன்றும் ஆங்கிலம், தமிழ் ஐந்து முறை படித்து எழுதிப்பார்க்க வேண்டும்

அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு (மொழிப்பெயற்ச்சி) - க்கு ஐ.வி.டி.பி. புத்தகத்தில் உள்ள பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

**இது ஒரு வெற்றியை நோக்கிய பயணம். . . . . . .**